# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2163 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

*தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) சேவைப் பிரிவின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் III ஆம் தர தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2019*

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தில் மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பொருட்டு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2020, மே மாதம் கொழும்பு மாவட்டத்தில் நடாத்தப்படும். இந்த பரீட்சையினைப் பின்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு தொகை மதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. பரீட்சையின் பொருட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி - 2020.03.13 ஆகும்.

1.0 **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

1.1 அரசாங்க சேவையின் நியமனங்களை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 1589/30 ஆம் இலக்க 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், தாபனவிதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப) சேவைப் பிரிவு பொருட்டான ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அவற்றிற்கு செய்யப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் அமைய தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் மேற்படி பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

1.2 இப்பதவிகள் நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையதுமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு நியமனம் பெறுபவர் கீழ்படிதல் வேண்டும். மேலும், விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர், அநாதைகள், ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விதித்துரைக்கப்படும் விதத்தில் நியமனம் பெறுபவர் பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

1.3 இந்த நியமனம் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். நியமனம் பெறுபவர் ஆட்சேர்க்கப்படும் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களுக்குள் இலங்கை தொழில்நுட்ப சேவை பிரமாணக் குறிப்பில் விதித்துரைக்கப்பட்டுள்ள முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

1.4 நியமனம் பெறுபவர் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 01/ 2014 இன்படி, பதவியில் நியமிக்கப்படும் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்களுக்குள் உரிய அரசகரும மொழி தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

1.5 தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் அல்லது தவிர்க்கும் நியமனம் பெறுபவரின் நியமனம் இரத்துச் செய்யப்படலாம்.

2.0 **மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :-**

2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் அட்டவணை 1 இற்கு இணங்க இப்பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 31,040-10×445- 11×660-10×730-10×750-ரூபா 57,550 (MN-3-2016) ஆகும். 2020.01.01 ஆந் திகதி வரை குறித்த சுற்றறிக்கையின் அட்டவணை II இன் படி சம்பளம் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படும் ஏனைய படிகளும் இப்பதவி வகிப்பவருக்கு உரித்துடையதாகும்.

3.0 **ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள்.-**

3.1 **பொதுத் தகைமைகள்**

3.1.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

3.1.2 நல்லொழுக்கம் மற்றும் உடல் ஆரோக்கியத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

3.1.3 ஏதேனும் மதமொன்றில்/மதம் சார்ந்த நிக்காய (பிரிவு) ஒன்றின் துறவு நிலையிலுள்ளவராக இருத்தலாகாது.

3.1.4 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் V ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட தகுதியிழந்தவராக இருத்தலாகாது.

3.1.5 பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான தகைமைகள் அனைத்தையும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று சகல விதத்திலும் பூர்த்திசெய்தவராக இருத்தல் வேண்டும்.

3.2 **வயது**.- விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கிணங்க 2002.02.28 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அத்துடன் 1990.02.28 ஆந் திகதிக்கு அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியைக் கொண்டவர்கள் மாத்திரம் இதற்கு விண்ணப்பிக்கலாம்.)

3.3 ***கல்வித் தகைமைகள்*** :

3.3.1 தமிழ்/ சிங்களம்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்துக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

3.3.2 கல்விப் பொது தராதர (உயர் தரப்) பரீட்சையில் விஞ்ஞான (உயிரியல்/ கணிதம் (பௌதிகவியல்)/தொழில்நுட்பவியல் பாடப்பிரிவுக்குரிய மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் நான்கு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.)

3.4 ***தொழிற்றுறை தகைமைகள்*** :

3.4.1 மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்)

அல்லது

3.4.2 தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்)

அல்லது

3.4.3 இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்)

அல்லது

3.4.4 கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்)

அல்லது

3.4.5 இலங்கை பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையின் 1 ஆம் பகுதியை வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல் (சிவில்)

அல்லது

3.4.6 தொழில் துறைக்கு ஏற்புடைய தேசிய தொழிற் தகைமை (NVQ) VI மட்டத்திலான தகைமையைப் பூர்த்திசெய்திருத்தல்

---

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, மாச்சு மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அல்லது

3.4.7 உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்படி தொழில்நுட்ப கல்விச் சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து விசாரித்து கருத்துக்களை பெற்றுக்கொண்டதன் பிற்பாடு மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா விதத்திலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வேறு தொழில்நுட்ப தகைமையைப் பெற்றிருத்தல்.

3.5 ***உடல், உள தகைமைகள்*** :

விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குமான சிறந்த உடல், உள தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

4.0 **பரீட்சைக் கட்டணம்** .- பரீட்சைக்கான கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக்கட்டணத்தினை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டிலுள்ள ஏதாவதொரு தபால்/உப தபால் அலுவலகத்திற்கு அல்லது மாவட்ட/ பிரதேச செயலகத்திற்கு செலுத்துதல் வேண்டும். இக்கட்டணம் எக்காரணத்திற்காகவும் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. பற்றுச்சீட்டின் ஒளிப்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரி வைத்திருத்தல் பயனுள்ளதாகும். காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5.0 **விண்ணப்பிக்கும் முறை**.-

5.1 இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க ஏ4 கடதாசியின் இருபக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்க வேண்டியதுடன் 01 முதல் 05 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், 06 முதல் 13 வரையான தலைப்புக்கள் ஏனைய பக்கங்களிலும் அமையுமாறு கணினிமூலம் தயாரிக்கப்பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் நிரப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் முழுமையற்ற தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் ஒளிப்படப் பிரதியை விண்ணப்பதாரி கைவசம் வைத்திருப்பது பயனுடையதாகும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது பற்றி பரீட்சித்துப் பார்க்க வேண்டும். அவ்வாறில்லை எனின் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படலாம்.

5.2 விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரி பரீட்சையில் தோற்றுவதற்கு உத்தேசித்திருக்கும் மொழி ஊடகத்தில் இருத்தல் வேண்டும்.

5.3 பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக,

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்புக் (நிறுவனம் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை சேர்த்தனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் “தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) சேவைப் பிரிவிற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2019” என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். இத்திகதியின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தமிழ் அல்லது சிங்கள மொழியில் விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது பரீட்சையின் பெயரை ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் கட்டாயமாகும்.

5.4 விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரிகள் கையொப்பத்தை பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, முப்படைகளில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது அரசாங்க சேவையில் நிரந்தர பதவிநிலை தரத்திலுள்ள உத்தியோகத்தர் ஆகியோர்களைக் கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

5.5 எல்லா விதத்திலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் தபாலில் தொலைந்து போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பிலான முறைப்பாடு எதுவும் கருத்திலெடுக்கப்படமாட்டாது.

5.6 விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளுக்கு விநியோகிக்கப்பட்டவுடன் அதுபற்றிய அறிவித்தலொன்று செய்தித்தாள்களில் அல்லது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப் பெறவில்லை எனின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு, அதுபற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், குறித்த விபரங்களுடன் அனுமதி அட்டையின் பிரதியொன்றை பெறுவதற்கு ஏற்றவகையில் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிடுவதன்மூலம் கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவதன்மூலம் விசாரித்தல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மேலும், அவ்வாறு விசாரிக்கையில் பரீட்சைகள் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக தங்கள் வசம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தை பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றை தயார் செய்துகொண்டு வைத்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும்.

6.0 **பரீட்சைக்கு அனுமதித்தல்**

6.1 எல்லா விதத்திலும் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்கு பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

6.2 பரீட்சார்த்தி தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு அபேட்சகரும் உரிய பரீட்சை மண்டபத்திற்கு ஏற்புடைய அனுமதி அட்டையை, கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்டு பரீட்சைக்குத் தோற்றிய முதல் தினத்திலேயே பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்கள் இந்த வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். குறித்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கும் ஆளாக நேரிடும்.

**கவனிக்கவும்**.- விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது, அவர் பரீட்சையில் தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதப்படுதலாகாது.

7.0 **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.-

7.1 பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடம் பொருட்டும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் பரீட்சை மண்டபத்தினுள் தமது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். அதற்காக, கீழே குறிப்பிடப்படும் ஏதாவதொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்:

(i) தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தலை மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரரை இனங்காணுவதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது இருத்தல் வேண்டும்.

8.0 **பொய்யான தகவலுக்கான தண்டனைகள்**.- விண்ணப்பதாரி ஒருவர் தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின் எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தத்தன்மை இரத்துச்செய்யப்படும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயம் பொய்யானது எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது ஏதேனும் முக்கிய விடயத்தை வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாகக்கூடும்.

9.0 இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

10.0 **பரீட்சை முறையும் பரீட்சை மொழி ஊடகமும்**.- இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

**குறிப்பு** :

(i) பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றும் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்;
(ii) தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது.

11.0 **ஆட்சேர்ப்பு முறை**.-

11.1 எழுத்துப் பரீட்சை.-

பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய இரு (02) வினாப்பத்திரங்களைக் கொண்டமைந்த எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்படும். ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்கு பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் வருமாறு.

| பாடம் | நேரம் | உச்ச புள்ளிகள் | சித்தியடை வதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. நுண்ணறிவு | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 02. விடயத்துடன் தொடர்புற்ற தொழில்நுட்ப பரீட்சை | 3 மணித்தியாலங்கள் | 100 | 40 |

11.2 சாதாரண நேர்முகப் பரீட்சை.-

(i) எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளிலிருந்து தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வரையறுக்கப்பட்ட புள்ளிக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் மேலே இலக்கம் 3.0 இல் குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகளைப் பரீட்சித்துப் பார்க்கும் முகமாக சாதாரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுகிறது.

(ii) சாதாரண நேர்முகப் பரீட்சைக் குழாம் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும்.

11.3 ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் சாதாரண நேர்முகப் பரீட்சையில் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும் எழுத்துமூலப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரியின் திறமையின் பொருட்டு இப்பதவிக்கு ஆட்சேர்க்கப்படுவர்.

11.4 பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அறிவித்தலானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளம் மூலம் மேற்கொள்ளப்படும்.

12.0 **எழுத்துப் பரீட்சையின் பாடத்திட்டம்**.-

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 01. நுண்ணறிவு | புரிந்துகொள்ளும் திறன், தர்க்க விமர்சனரீதியான அறிவு, சரியான தீர்மானமெடுக்கும் திறன், புள்ளிவிபர மற்றும் கணித சிக்கல்களை தீர்க்கும் திறன், மொழிசார்ந்த அறிவு, அட்டவணைகள், படங்கள், குறிப்புக்கள், வரைபு |
| 02. விடயத்துடன் தொடர்புற்ற தொழில் நுட்பப் பரீட்சை | அளத்தல், திட்டங்கள் பற்றிய அறிவு, அத்திவாரம், மண் வகைகள், கட்டடப் பொருட்கள், கட்டட கட்டமைப்புக்கள் மற்றும் ஒப்பமாக்கல், கட்டட வரைபடங்கள் மூலம் கணித்தல், செலவு மதிப்பீடுகளை தயாரித்தல், நீர் வழங்கல் மற்றும் சாக்கடை முறைகள் |

13.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழி வசனங்களுக்கிடையே ஏதேனும் பொருந்தாமை காணப்படின், சிங்கள மொழி அறிவித்தலின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கலாநிதி ஐ. ஆர். பண்டார,
பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்,
"சங்கியான மந்திரய",
306/71, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) சேவை பிரிவு - இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் தரம் III**

Supervisory Management Assistant (Technical) Service Category of the Department of Census and Statistics - Technical Officer Grade III of Sri Lanka Technical Service

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

01.பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
2 - சிங்களம்
3 - தமிழ் [ ]
4 - ஆங்கிலம்
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதுக)

02. (i) முழுப்பெயர் :----.
(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :----.
(iii) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

03. முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் :-----.
(i) அலுவலக முகவரி :----.
(ii) அலுவலக தொலைபேசி இலக்கம் : [ | | | | | | | | | ]
(iii) தனிப்பட்ட முகவரி :----.
(iv) தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் : [ | | | | | | | | | ]
(v) கையடக்க தொலைபேசி இலக்கம் : [ | | | | | | | | | ]
(vi) மின்னஞ்சல் :----.

04. ஆண்/பெண் பிரிவு
ஆண் - 0
பெண் - 1 [ ]
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதுக)

05. தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | | | ]

06. (i) பிறந்த திகதி : ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

(ii) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : [ | | | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

07. விவாகமானவரா/விவாகமாகாதவரா :
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதுக)

08. (i) க. பொ. த. (சா.த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :----.
(ii) பரீட்சை சித்தியடைந்த ஆண்டும் மாதமும் :----.
(iii) விண்ணப்பதாரியின் சுட்டிலக்கம் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| .............................. | .................... | .............................. | .................... |
| .............................. | .................... | .............................. | .................... |
| .............................. | .................... | .............................. | .................... |
| .............................. | .................... | .............................. | .................... |
| .............................. | .................... | .............................. | .................... |
| .............................. | .................... | .............................. | .................... |

09. க. பொ. த. (உ.த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :----.
(i) பரீட்சை சித்தியடைந்த ஆண்டும் மாதமும் :----.
(ii) விண்ணப்பதாரியின் சுட்டிலக்கம் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| .............................. | .................... | .............................. | .................... |
| .............................. | .................... | .............................. | .................... |
| .............................. | .................... | .............................. | .................... |

10. (i) அறிவித்தலின் 3.4 க்கு ஏற்புடைய தொழிற் தகைமை :--------------.
(ii) தொழிற் தகைமை செல்லுபடியாகும் திகதி :--------------.

11. பரீட்சைக்கட்டணம் :

| |
|---|
| ரூபா 600.00 ஆன பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டினை கழறாதவாறு இங்கே ஒட்டவும். (பற்றுச்சீட்டின் ஒளிப்படப் பிரதியை வைத்திருப்பது பயனுள்ளதாகும்.) |

12. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது பிழையானது என நான் தேர்ந்தெடுக்கப்பட முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் எனவும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எனக்கு எந்தவிதமான நட்டஈடும் வழங்கப்படாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நன்கறிவேன். மேலும், பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவேன் எனவும் உறுதி கூறுகின்றேன்.

----------------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----------------.

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ் விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் ............................... (முழுப்பெயர்) அவர்களை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கறிவேன் எனவும், ........................... ஆந் திகதி என் முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(அலுவலக முத்திரை:-----.
திகதி :----.

அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்

இந்த விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி ........................... தற்போது இந்த அமைச்சில்/ திணைக்களத்தில் ....................... ஆக நிரந்தர/ தற்காலிக/ அமய ஊழியராகக் கடமையாற்றுகிறார் எனவும், அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதனை அறிவிக்கின்றேன்.

-----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை)

பதவி :----.
திகதி :----.

02-456

---

**புத்தசாசனம், கலாசாரம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு**

**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**

கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதி 'பொறுப்பாளர்' பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால், கதிர்காமத்தில் அமைந்துள்ள இந்து யாத்திரிகர் விடுதி பொறுப்பாளர் பதவிக்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **சேவைக்கான நிபந்தனைகள்**.- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி, கீழ்க் குறித்த நிபந்தனைகளின் கீழ் வகுப்பு III இன் கீழ் சேவையில் அமர்த்தப்படுவார்.

விண்ணப்பதாரி வகுப்பு III இல் நியமிக்கப்படும் திகதியிலிருந்து 03 வருடங்கள் முடிவதற்கு முன் 1 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெற வேண்டும்.

குறித்த உத்தியோகத்தர் II ஆம் வகுப்பில் அமர்த்தப்படும் தினத்திலிருந்து 03 வருடங்கள் முடிவதற்கு முன் 2 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெறவேண்டும். குறித்த உத்தியோகத்தர் I ஆம் வகுப்பில் அமர்த்தப்படும் தினத்திலிருந்து 05 வருடங்கள் முடிவதற்கு முன் 3 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தி பெறவேண்டும். பொது நிர்வாக 28.05.2007ஆந் திகதிய சுற்றறிக்கை இல. 07/2007 இற்கமைவாக உத்தியோகபூர்வ இரண்டாம் மொழியில் தேர்ச்சி மட்டத்தை அடைந்து கொள்ள வேண்டும்.

03. **சம்பள அளவுத்திட்டம்**.- சம்பள வகுதியின் இல. MN1-2016 பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 3/2016 (iv) சம்பள அளவுத்திட்டம்.- ரூ. 27,140.00 - 10 × 300- 11 × 350 - 10 × 495 - 10 × 660 - ரூபா 45,540.00

04. **தகைமைகள்**

4.1 **கல்வித் தகைமை**

(i) க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் தமிழ் /சிங்களம் / ஆங்கிலம், கணிதம் மற்றும் வேறு இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

அத்துடன்

(ii) க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் குறைந்தது ஒரு (01) பாடத்திலேனும் சித்தி பெற்றிருத்தல் (பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த)

4.2 **ஏனைய தகைமைகள்**

(i) இந்து சமயம், கலாசாரம் மற்றும் சுதேச கலாசாரத்தில் போதிய அறிவினைக் கொண்டிருத்தல்.
(ii) தமிழ் மற்றும் சிங்கள மொழி தேர்ச்சி விரும்பத்தக்கது.

4.3 **தகுதி**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல்
(ii) நல்லொழுக்கமுடையவராகவும், உடல், உள ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல்
(iii) 2020, மாசி 29 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும்

இருத்தல். அரசாங்க சேவையில் உறுதிப்படுத்தப்பட்டு பணி புரியும் விண்ணப்பதாரிகளாயின், இவ்வயதெல்லை பொருத்தமற்றதாகும்.

05. **விண்ணப்பிக்கும் முறை**.- இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப A4 அளவு (8½" × 12") தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப் படிவங்கள் தாங்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலத்தில் தயாரிக்கப்பட வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலில் 2020, மாச்சு 01ஆந் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக "பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248,1/1 காலி வீதி, கொழும்பு - 04" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் வைத்துஅனுப்பும் கடிதஉறையில் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். இவ்வறிவித்தலிற் குறிப்பிடப்படாத அல்லது தெளிவற்ற ஏதேனும் விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானங்களை மேற்கொள்ளும் உரிமையை திணைக்களப் பணிப்பாளர் கொண்டுள்ளார்.

06. **பரீட்சைக் கட்டணம்**.- விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர், "பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்" எனும் பெயரிற் பெறப்பட்ட ரூபா 500.00 பெறுமதியான சாதாரண காசுக்கட்டளையை விண்ணப்பப் படிவத்தின் உரிய கூட்டில் ஒட்டி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இப்பணம் மீளளிக்கப்படாததாகும்.

07. **தெரிவு செய்யப்படும் முறை**.-

7.1 **எழுத்து மூலப் பரீட்சை**.- இப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.
(i) பொது நுண்ணறிவு – 100 புள்ளிகள் (கால அளவு 1 மணித்தியாலம்)
(ii) பொதுஅறிவு – 100 புள்ளிகள் (கால அளவு 1 மணித்தியாலம்)

இப்பரீட்சையானது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும். ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளியைப் பெற்ற விண்ணப்பதாரிகள் மட்டும் வாய்மொழி மூலப் பரீட்சையொன்றுக்காக அழைக்கப்படுவர்.

**பரீட்சைக்குரிய திகதி**.- இப் பரீட்சை 2020, மாச்சு மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும். இப் பரீட்சையை பிற்போடுகின்ற அல்லது இரத்துச் செய்கின்ற உரிமையை பணிப்பாளர் கொண்டிருப்பதோடு இவ்வறிவித்தலிற் குறிப்பிடப்படாத அல்லது தெளிவற்ற ஏதேனும் விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானங்களை மேற்கொள்ளும் உரிமையையும் கொண்டுள்ளார்.

**பரீட்சைமொழி மூலம்**.- இப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்படும்.

08. **பாடத்திட்டம்**

(i) பொது நுண்ணறிவு (100 புள்ளிகள்) – 1 மணித்தியாலம்

இப்பரீட்சை, சொற்பிரயோகம் அல்லது எண்களுடன் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல் தொடர்பாக, விண்ணப்பதாரியின் கிரகிக்கும் ஆற்றல், உணர்ந்து அறியும் சக்தியின் கால அளவு, அனுமானித்துக் கொள்ளும் திறமை என்பவற்றை அளவிட்டுக் கொள்வதற்காக நடாத்தப்படும்.

(ii) பொது அறிவு (100 புள்ளிகள்) – 1 மணித்தியாலம்

(1) இந்து சமய மற்றும் கலாசார விடயங்கள்

(2) சமூக, அபிவிருத்தி தொடர்பான பொது அறிவு

(3) இலங்கையின் பொருளாதாரம், அரசியல் தொடர்பான நடப்பு விவகாரங்கள்

(4) பொதுவான நிர்வாக நுட்பங்கள் மற்றும் வாடிக்கையாளரை அணுகும் தன்மை

(5) உலக நடப்பு விவகாரங்கள்

(6) தகவல் தொழில்நுட்பம்

09. **கட்டமைக்கப்பட்டநேர்முகப் பரீட்சை**.- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரினால் நடாத்தப்படும். "குறித்த பாட அறிவு", "குறித்த மேலதிக தகைமைகள்" மற்றும் "ஏனைய சாதனைகள்" என்பவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். குறைந்தது 40 புள்ளிகளையேனும் நேர்முகப் பரீட்சையின் போதுபெறவேண்டும்.

அ. உமாமகேஸ்வரன்,
பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,

06.02.2020.

மாதிரிவிண்ணப்பப் படிவம்

**கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதி பொறுப்பாளர் - வகுப்பு III க்கு**

**ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை**

(அலுவலக பாவனைக்கு மட்டும்)

01. பரீட்சை மொழி மூலம் — சிங்களம் -1
தமிழ் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடுக.)

02. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி)
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) ...........................................................................
...........................................................................................................

03. முழுப்பெயர் ...........................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)
...........................................................................................................

04. தேசிய ஆளடையாள அட்டை இல. ...........................................................................

05. நிரந்தர முகவரி :...........................................................................
...........................................................................................................

06. கடித முகவரி (அஞ்சல்) ...........................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)
...........................................................................................................

07. 7.1 பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

7.2 விண்ணப்ப முடிவுத் தினத்தன்று வயது :
வருடங்கள் ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

08. பால் (உரிய இலக்கத்தை கூட்டினுள் இடுக.) ஆண் - 0
பெண் - 1 ☐

09. விவாகமானவரா/விவாகமாகாதவரா?: ...........................................................................

10. இனக்குழு (உரிய இலக்கத்தை பெட்டிக்குள் குறிப்பிடுக)
(சிங்களம் 1, தமிழ் 2, இஸ்லாமியர் 3, ஏனையவை 4)

11. தொலைபேசி இல. : ...........................................................................

12. கல்வித் தகைமைகள்
12.1 க.பொ.த. (சா.த.) பெறுபேறு தொடர்பான விபரம்:

| இல. | ஆண்டு | சுட்டிலக்கம் | பாடம் | பெறுபேறுகள் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

12.2 க.பொ.த. (உ.த.) பெறுபேறு தொடர்பான விபரம் :

| இல. | ஆண்டு | சுட்டிலக்கம் | பாடம் | பெறுபேறுகள் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

12.3 ஏனைய தகைமைகள்:

...........................................................................................................
...........................................................................................................

13. ஏதேனும் குற்றச் செயல்களுக்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளீரா?.

(ஆம் எனின் விபரம் தருக)

...........................................................................................................

14. பரீட்சைக் கட்டணத்துக்கான காசுக் கட்டளை தொடர்பான விபரங்கள்:

(i) காசுக் கட்டளை பெற்றுக்கொண்ட தபால் அலுவலகம்: ...........................................

(ii) காசுக் கட்டளையின் இலக்கமும் திகதியும்:...........................................

காசுக் கட்டளையை இவ்விடத்தில் சரியாக ஒட்டுக. (எதிர்காலத் தேவைக்காக அதன் நிழற்படப் பிரதியொன்றை வைத்துக் கொள்ளவும்.)

15. **விண்ணப்பதாரியின் வெளிப்படுத்தல்**

இந்தப் படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள், எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும், நான் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டவரல்லர் எனவும் பதவியை விட்டுச் சென்ற ஒருவர் இல்லையெனவும் பிரகடனப்படுத்துகிறேன். மேலும் பரீட்சை விதிமுறைகளுக்கு கட்டுப்படவும், பரீட்சைக்கு முன்போ அல்லது பரீட்சையின் போதோ அல்லது அதற்கு பின்னரோ நான் தகுதியற்றவன் எனக் காணப்பட்டால் எனது பரீட்சார்த்த தகைமையை நீக்குவதற்கு அல்லது என்னை எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் ஏதேனும் தீர்மானங்களுக்குக் கட்டுப்படவும் நான் இணங்குகின்றேன். அத்துடன் இந்தப் பதவி, நியமனம் மற்றும் பணிபுரியும் நிலையம் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரமுடைய இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளரின் அனைத்து விதிமுறைகளுக்கும் கட்டுப்படவும் நான் இணங்குகின்றேன்.

திகதி:...............

..................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**அரசாங்க சேவை உத்தியோகத்தராயின் திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல்**

திரு./திருமதி/செல்வி...........................................................................என்பவரின் விண்ணப்பத்தை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். அவர் இந்த அமைச்சில் /திணைக்களத்தில், நிரந்தர/தற்காலிக/அமைய உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார் என்பதையும்,அவர் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் விடுவிக்கப்படலாம் /விடுவிக்கப்பட முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

..........................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிமுத்திரையும்.

திகதி:.....................
பெயர்: .....................
பதவி: .....................
அமைச்சு/திணைக்களம்:.....................

02-457

---

**சுற்றாடல் மற்றும் வன சீவராசிகள் வளங்கள் அமைச்சு**

**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்**

இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை.

Open and Limited Competitive Examination for Requirement of Officers of Grade III
Of Sri Lanka Technical Service

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தில், இலங்கை தொழில்நுட்ப சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) சேவை வகையைச் சார்ந்த பதவி வெற்றிடங்கள் 28 இனை நிரப்புவதற்கான திறந்த மற்றும்

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தகுதி வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பம் கோரல். இப்பரீட்சை கொழும்பு நகரில் தாபிக்கப்படும் பரீட்சை நிலையங்களில் 2020, யூன் மாதத்தில் நடாத்தப்படும்.

01. பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | திறந்த | மட்டுப்படுத்தப்பட்ட |
| 01. | பூங்கா அபிவிருத்தி உதவியாளர் | 17 | 07 |
| 02. | ஆராய்ச்சி உதவியாளர் | 02 | - |
| 03 | செவி மற்றும் கட்புல தொழில்நுட்ப உதவியாளர் | 01 | - |
| 04. | தொழில்நுட்பவியல் அலுவலர் (சிவில்) | 01 | - |

02. **ஆட்சேர்ப்பு முறை:**

2.1 இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை

**பரீட்சை நடாத்தப்படும் திகதி**: இப்பரீட்சை 2020 யூன் மாதத்தினுள் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். இப்பரீட்சையை இரத்துச் செய்ய அல்லது பிற்போடுவதற்கான உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது பொதுச் சேவை ஆணைக்குழுவைச் சாரும்.

2.2 **சாதாரண நேர்முகப் பரீட்சை** .- இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்கள் - பதவிகளுக்கான விண்ணப்பதாரிகளது தகைமைகளை உறுதிப்படுத்திக்கொள்ளல்

03. 3.1 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III பதவியில் இணைத்துக்கொள்ளப்படுவர்.

3.2 இப்பதவி நிரந்தரமானது. (ஓய்வூதியம் தொடர்பில் எதிர்காலத்தில் அரசாங்கம் மேற்கொள்ளும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்பட்டது.)

3.3 நியமனம் செயற்படுத்தப்படும் திகதியிலிருந்து (03) வருட தகுதிகாண் காலத்துக்குட்பட்டது. நியமனம் பெற்று 03 வருட காலத்துக்குள், முதலாவது தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

3.4 அவ்வாறே, 2014.01.21 ஆந் திகதிய 01 /2014 ஆம் இலக்கம் கொண்ட பொது நிர்வாக சுற்று நிருபத்தின் படி இரண்டாவது அரச கரும மொழியிலான உரிய தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (இலங்கை தொழில்நுட்ப சேவையின் விதிமுறைகளுக்கேற்ப)

04.

4.1 சம்பளப் பிரிவு இலக்கம் - (MN 3 - 2016)

4.2 சம்பள அளவு: ரூ. 31,040 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 - 10 × 750 - 57,550.00

05. **வயதெல்லை** : (விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு)
குறைந்த வயதெல்லை - 18 வருடங்கள்
கூடிய வயதெல்லை - 30 வருடங்கள்

அதன் பிரகாரம் 2002.03.13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1990.03.13 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்தவர்கள் மாத்திரமே இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

06. உடல் தகைமைகள்: சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றவும் பதவியின் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உளத் தகைமையுடன் இருத்தல் வேண்டும்.

07. **தகைமைகள்**

07.1 திறந்த ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்:-

| பதவி | கல்வித் தகைமைகள் |
|---|---|
| பூங்கா அபிவிருத்தி உதவியாளர் | I. சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஒரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br>மற்றும் |
| ஆராய்ச்சி உதவியாளர் | II. (a) பூங்கா அபிவிருத்தி உதவியாளர் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர் பதவிகளுக்கு க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல், தாவரவியல், பௌதீகவியல், விலங்கியல், உயிரியல் முறைமைத் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக விஞ்ஞானப் பாடங்கள் மூன்றில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் (பொது ஆங்கிலம் மற்றும் பொதுப்பரீட்சை நீங்கலாக) |
| செவி மற்றும் கட்புல தொழில்நுட்ப உதவியாளர் | (b) தொழில்நுட்பவியல் அலுவலர் மற்றும் செவி மற்றும் கட்புல தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளுக்கு க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் கணிதம் அல்லது தொழில்நுட்பவியல் துறையில் இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், பொறியியல் தொழில்நுட்பம் அல்லது தகவல் தொழில்நுட்பம் உட்பட கணிதம் அல்லது தொழில்நுட்பவியல் துறைப் பாடங்கள் (3) மூன்றில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் (பொது ஆங்கிலம் மற்றும் பொதுப்பரீட்சை நீங்கலாக) |
| தொழில்நுட்பவியல் அலுவலர் | |

07.2 மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்:-

07.02 01. **அனுபவம்**.-

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தில் நிரந்தர திணைக்களப் பதவியொன்றில் உரிய துறையில் ஐந்து (5) வருட செயற்றிறன் மிக்கதும் திருப்திகரமானதுமான சேவை அனுபவமுள்ள, பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர்கள் மாத்திரமே மேற்படி பதவிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் கீழ் தகுதி பெறுவோராவர்.

07.2. 02. **கல்வித் தகைமைகள்**.-

சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

07.3 திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தொழில் தகைமைகள்:-

| பதவி | தொழில் தகைமைகள் |
|---|---|
| பூங்கா அபிவிருத்தி உதவியாளர் | தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் கீழுள்ள பயிற்சி நிலையமொன்றில் தாவரவியல் பூங்காக்கள் அலங்காரவியல் தொடர்பான இரு வருட டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியில் விவசாயம் தொடர்பான இரு வருட டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>அக்குவைனாஸ் நிறுவனத்தில் விவசாயம் தொடர்பான இரு வருட டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>விவசாயத் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற இரு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற இரு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>தொழில் துறைக்குப் பொருத்தமான வகையில் தேசிய தொழில் பயிற்சித் தகைமை (NVQ) மட்டம் 6 க்கான தகைமைகளை பூரணப்படுத்தியிருத்தல்.<br>அல்லது |
| ஆராய்ச்சி உதவியாளர் | உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களில் விசாரித்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லாவகையிலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல். |
| செவி மற்றும் கட்புல தொழில்நுட்ப உதவியாளர் | மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் பதவிக்கு உரிய துறையிலான கற்கை நெறியொன்றை வெற்றிகரமாகக் கற்று தேசிய தொழில்நுட்ப சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட NVQ மட்டம் 6 க்கான கணினி டிப்ளோமா சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களில் விசாரித்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லாவகையிலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல். |
| தொழில்நுட்பவியல் அலுவலர் (சிவில்) | மொரட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>தேசிய தொழில் பயிலுனர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>தொழில் துறைக்குப் பொருத்தமான வகையில் தேசிய தொழில் பயிற்சித் தகைமை (NVQ) மட்டம் 6 க்கான தகைமைகளை பூரணப்படுத்தியிருத்தல். (சிவில்)<br>அல்லது<br>உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களில் விசாரித்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லாவகையிலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல். |

08. **வேறு தகைமைகள்**:

I. இலங்கைப் பிரஜைகளாயிருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரிகள் நன்னடத்தை உடையவர்களாயிருத்தல் வேண்டும்.
III. விண்ணப்பதாரி விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு 05 முதல் 7.3 வரையிலான சகல தகைமைகளையும் பொருத்தமான வகைகளிலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.
IV. ஏதும் மதப்பிரிவொன்றின் மதகுரு பதவியை வகிக்கும் எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகைமை பெறமாட்டார்.
V. விண்ணப்பதாரி உரிய அனைத்துத் தகைமைகளையும் உரிய வயதெல்லையையும் விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சகல வகைகளிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே சேவையில் இணைத்துக்கொள்வதற்கான போட்டிப்

பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவசியமான தகைமைகளை அவர் பூரணப்படுத்தியுள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

09. **எழுத்துப் பரீட்சை :-**

9.1 இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| வினாப் பத்திரத்தின் பெயர் | வினாப் பத்திர இலக்கம் | காலம் | உச்ச புள்ளி | சித்திக் கான புள்ளி |
|---|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 1 | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| விடய அறிவு (பூங்கா அபிவிருத்தி உதவியாளர் / ஆராய்ச்சி உதவியாளர் பதவிகள்) | 2 | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| விடய அறிவு (செவி மற்றும் கட்புல தொழில்நுட்ப உதவியாளர் பதவி) | 3 | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| விடய அறிவு (தொழில்நுட்பவியல் அலுவலர் (சிவில்) பதவி) | 4 | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |

**குறிப்பு** – சகல விண்ணப்பதாரிகளும் 1 – நுண்ணறிவுப் பரீட்சை வினாப்பத்திரத்துக்கும் 2,3,4 வினாப்பத்திரங்களில் ஒன்றுக்குமாக மொத்தம் இரண்டு வினாப்பத்திரங்களுக்குத் தோற்ற வேண்டும். அவ்விரு வினாப்பத்திரங்களுக்குமான பரீட்சைகள் ஒரே நாளில் நடாத்தப்படும்.

9.2 பாடப்பரப்பு

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாடப்பரப்பு |
|---|---|
| பூங்கா அபிவிருத்தி உதவியாளர் | 1. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பூச்செடியியல் கைத்தொழிலின் பங்களிப்பு<br>1.1. மொத்தத் தேசிய உற்பத்திக்கு பூச்செடியியல் கைத்தொழிலின் பங்களிப்பு<br>1.2. பூச்செடியியல் கைத்தொழிலின் ஏற்றுமதி இறக்குமதி நிலைமைகள்<br>2. இலங்கையின் காலநிலை வலயங்கள் பற்றிய அறிவு<br>3. மண் மற்றும் தாவரப் போஷணை<br>3.1. மண் உடற்கூறியல், கட்டமைப்பு, பௌதீக மற்றும் இரசாயன உவர்த் தன்மை மற்றும் பயிர்ச்செய்கையில் ஏற்படுத்தும் தாக்கங்கள் |
| ஆராய்ச்சி உதவியாளர் | 3.2. தாவரப் போஷணை, மண் தாவரப் போஷணை முகாமைத்துவம்<br>3.3. தாவரப் போஷணை பற்றிய விஷேட விடயங்கள்<br>4. மரக்கறி உற்பத்தி<br>4.1 மரக்கறி நாற்றுமேடை முகாமை<br>4.2 மரக்கறி வகை வளர்ப்பு நடவடிக்கைகள், அறுவடை மற்றும் தயார்படுத்தல்<br>5. தேனீ வளர்ப்பு<br>5.1 பொருளாதார முக்கியத்துவம்<br>5.2 தேனீ இல்லங்களை ஆரம்பித்தலும் நடாத்திச் செல்லலும்<br>5.3 அறுவடை மற்றும் தயார்படுத்தல்<br>6. பூச்செடியியல்<br>6.1 பூச்செடியியல் முறைமைகளும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பத்தின் மூலம் உற்பத்தி அதிகரிப்பும்<br>7. நில அலங்கார முறைமைகள்<br>7.1 வரலாறு, பூங்கா அலங்காரவியல் அடிப்படைகள், பூங்கா அலங்காரவியலின் அங்கங்களும் முறைமைகளும்,<br>7.2 பூமித் திட்டமிடல், இவை பற்றிய சட்ட திட்டங்கள், விதிமுறைகள்<br>7.3 சந்தைக்கான வெட்டுப்பூக்கள், அலங்காரத் தாவர இலை உற்பத்தியும் அவற்றை சந்தைக்காகத் தயார்படுத்தலும்<br>8. உயிரினப் பல்வகைமை<br>8.1. உயிரினப் பல்வகைமை பேணல், தாவர அடையாளம் காணலும் பெயரிடலும்<br>9. இழைய உருவாக்கம்<br>9.1. இழைய உருவாக்க முறைமையின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் கடந்த காலத் தகவல்கள் பற்றிய அறிவு<br>9.2. இழைய உருவாக்கத்தின் பிரயோகம் / உள்ளீடுகள், உதாரணங்கள்<br>9.3. இழைய உருவாக்கத்தின் நன்மை, தீமைகள்<br>10. தாவரத் தடுப்புக் காப்பு பற்றிய அறிவு<br>10.1 தாவரத் தடுப்புக் காப்பு விதிமுறைகள் பற்றிய அறிவு<br>10.2 தாவரத் தடுப்புக் காப்பு முறைமைகள்<br>11. மரபணுத் தொழில்நுட்பம்<br>11.1 DNA யின் முக்கியத்துவம்<br>11.2 மரபணு என்றால் என்ன? அதன் செயலொழுங்கு<br>11.3 மரபணுப் பொறியியல் நுட்ப முறைமைகளின் மூலம் தாவரங்களை மேம்படுத்துவதற்கான இயலுமை |
| செவி மற்றும் கட்புல தொழில்நுட்ப உதவியாளர் | 1. நிலையான மற்றும் வீடியோ கமெரா ஒன்றின் பாகங்கள், அவற்றின் பணிகள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய அறிவு<br>2. கணினி ஒன்றின் பாகங்கள், அவற்றின் செயற்பாடுகள் பற்றிய அடிப்படை அறிவு<br>3. கணினி ஒன்றினுள் புகைப்படங்களையும் வீடியோக்களையும் சேமித்தல், எடிட் பண்ணுதல் மற்றும் வீடியோ நிகழ்ச்சிகளைத் தயாரித்தல் பற்றிய அடிப்படை அறிவும் அது தொடர்பான மென்பொருள்கள் பற்றிய அறிவும்<br>4. புகைப்படமெடுத்தல் (photography) பற்றிய தேற்ற மற்றும் பிரயோக அறிவு<br>5. வீடியோப் படமெடுத்தலும் அதன் அடிப்படைகளும்<br>6. மல்டி மீடியா உபகரணத்தின் பாகங்களும் செயற்பாடுகளும்<br>7. வானொலி உபகரணம் பற்றிய அறிவும் ஒலிப் பதிவு செய்தல் மற்றும் செவிப்புல உபகரணங்களை இயக்குதல் மற்றும் நிர்வகித்தல் பற்றிய அறிவும் |
| தொழில்நுட்பவியல் அலுவலர் | 1. கட்டிட நிர்மாணக் கலை வரைதல்கள்<br>1.1 கட்டமைப்பு வரைதல்கள்<br>1.2 பலப்படுத்தப்பட்ட கொங்கிரீட் தகட்டு அத்திவாரம், இரும்புக் காப்ப, தூண்கள் ஆகியவற்றின் கட்டமைப்பு வரைதல்கள் பற்றிய அறிவு<br>2. கட்டிடப் பொருட்கள் பற்றிய விபரம்<br>2.1. சீமெந்து, சுண்ணாம்பு, கொங்கிரீட் கல், செங்கல், பலகை, சக்கைக் கல், நிறப்பூச்சுக்கள் மற்றும் வார்னிஷ் வகைகள், பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி ஆகியவற்றைக் கட்டிட நிர்மாணப் பொருட்களாகப் பயன்படுத்தும் முறைமைகள் மற்றும் அவற்றின் தராதரம் பற்றிய அறிவு<br>3. கட்டிடப் பொருட்கள் அளவுத் திட்டத்தைத் தயாரித்தலும் மதிப்பீடு செய்தலும், அளவுத் திட்டப் பத்திரத்தைத் தயாரித்தலும் கட்டிட நிர்மாணத்துக்குத் தேவையான கட்டிடப் பொருட்களின் அளவு, தொழிலாளர் எண்ணிக்கை ஆகியவற்றை மதிப்பிடலும்<br>4. அளத்தலும் மட்டத்தைப் பெறலும்<br>4.1 சங்கிலி அளவீடு, மட்டத்தைப் பெறல், தியோடலயிட் பாவனை பற்றியதும் மேற்பரப்பு மேசை அளவீடு பற்றியதுமான அறிவு<br>5. கட்டிட நிர்மாணம்<br>5.1 அத்திவாரம், சுவர் கட்டுதல், பலகைக் கூரை, இரும்புக் காப்ப, தூண்கள், கொங்கிரீட் தூண்கள், அத்திவாரத்தட்டு, படி ஆகியன இடப்படும் முறைமைகளும் இடப்படும் சந்தர்ப்பங்களும்<br>6. கட்டமைப்புக்கள்<br>6.1 பெயர்ச்சி விசை, நெகிழ்ச்சி விசை வரைபுகள் ஆகியவற்றை அளவிடலும் நிர்மாணித்தலும்<br>7. சேவைகள்<br>7.1 மின்சாரம், நீர், சுகாதாரம்<br>8. பாதுகாப்பு முறைமைகள்<br>8.1 வேலைத் தளமொன்றில் காணப்பட வேண்டிய பாதுகாப்பு முறைமைகள் |

10. எழுத்துப் பரீட்சையொன்று மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையொன்றின் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்துக்கும் 40 % புள்ளிகளுக்குக் குறையாமல் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் முன்னுரிமை அடிப்படையில் வெற்றிடம் நிலவும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையானோரின் பெயர்கள் உள்ளடக்கப்படும் வகையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணை தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் ஊடாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படவுள்ள விகிதாசாரமானது அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள உள்ளக விண்ணப்பதாரிகள் எவரும் திணைக்களத்தினுள் இல்லாத சந்தர்ப்பத்தில் மாத்திரமே எஞ்சிய எண்ணிக்கை திறந்த பரீட்சைக்குத் தோற்றி தெரிவு செய்யப்படும் வெளிவாரி விண்ணப்பதாரிகளில் இருந்து பூரணப்படுத்தப்படும்.

10.1 **பரீட்சைப் பெறுபேறுகள்**.- பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகளை தனிப்பட்ட முறையில் அறிவிப்பதற்கு அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் வெளியிட இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

11. **பரீட்சை நிபந்தனைகள்**.-

11.1 பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் விரும்பிய ஏதாவது ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பதாரிகள் இப்பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவத்தில் காட்டப்பட்டுள்ள மொழிமூலத்தை மாற்ற அனுமதிக்கப்படமாட்டார். அனைத்து விண்ணப்பதாரிகளும் தமக்குரிய இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றத் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் திறந்த பரீட்சைக்கும் தோற்றத் தகைமை பெற்றிருப்பின் ஒரே விண்ணப்பப் படிவத்தைப் பயன்படுத்தி விண்ணப்பிக்க முடியும்.

11.2 பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 2003-02-13 இல் வைப்புச் செய்யப்படும் வகையில் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு தபாலகத்திலும் அல்லது உப தபாலகத்திலும் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்தின் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். அதன் நிழற்படப் பிரதியொன்றை தங்களிடம் வைத்துக் கொள்வது பயன் மிக்கதாகும்.

11.3 பரீட்சைக் கட்டணமாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதோடு, வேறொரு பரீட்சைக்காக மாற்றீடு செய்யப்படவும் மாட்டாது.

**குறிப்பு**: அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டபத்துக்குள் நுழைய இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம், தனது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திய அனுமதி அட்டையை மாத்திரமே சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது உரிய பதவியை வகிப்பதற்குத் தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கின்றார் என்பதை ஏற்றுக்கொள்வதாகும் என்று கருதப்படக்கூடாது.

11.4 விண்ணப்பப்படிவம் 21 – 29.7 செ.மீ. அளவு கொண்ட A4 கடதாசியில் தயாரிக்கப்படல் வேண்டும். 01 முதல் 03.4 வரையான இலக்கங்களையுடைய தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும் இலக்கம் 04 மேற்கொண்டுள்ள தலைப்புக்கள் முறையே ஏனைய பக்கங்களிலும் அமையும் வகையில் தயாரித்துக்கொள்ள வேண்டியதோடு, அதற்குரிய தகவல்களை பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தில், தமது கையெழுத்தில் தெளிவாக நிரப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழியிலான விண்ணப்பப் படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழியிலான விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தினை ஒத்திராத விண்ணப்பப் படிவங்களும் முழுமையற்ற விண்ணப்பப் படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுமென்பதால், விண்ணப்பப் படிவங்களை அனுப்ப முன்னர் அவை இவ்விளம்பரத்தில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தினை ஒத்திருக்கின்றனவா? என்பதனையும் அனைத்துத் தகவல்களும் உள்ளடக்கப்பட்டு பிழையின்றி நிரப்பப்பட்டுள்ளனவா? என்பதனையும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அது பற்றிய விபரம் விண்ணப்பப் படிவத்தில் ஒட்டப்பட்டிருக்கின்றதா? என்பதனையும் உறுதிப்படுத்திக்கொள்வதோடு, நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றை தம் வசம் வைத்துக்கொள்ளவும் கவனமெடுக்கவும்.

11.5 **பொய்யான தகவல்களுக்கான தண்டனை.**- விண்ணப்பப் படிவத்தை நிரப்பும் போது அதிக கவனமெடுத்து பிழையற்ற தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சை விதிமுறைகளின் படி எவரேனும் விண்ணப்பதாரி ஒருவர் தகுதியற்றவர் எனத் தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பத்தை ரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரி ஒருவரால் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் உண்மையற்றதெனத் தெரிய வந்தால் எந்தவொரு சந்தர்ப்பத்திலாயினும் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்பட முடியும்.

12.

12.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பார் என்ற எடுகோளின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட, விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய பற்றுச்சீட்டுடன் பிழையற்ற வகையில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்டவுடன் அது பற்றிய பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் விடுக்கப்படும். அவ்வறிவித்தல் வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் கழிந்த பின்னரும் தமது பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் யாரேனும் இருந்தால் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையில் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், தனது முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை பிழையின்றிக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியில் வசிப்பவராயின், அவ்விபரங்களுடன், பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை விரைவாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு தொலைநகல் மூலம் அனுப்பி விசாரிப்பது பயன் மிக்கதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தால் கேட்கப்படுகின்ற ஏதும் தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக தன்னிடமுள்ள விண்ணப்பப் படிவத்தினதும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் நிழற்படப்பிரதிகளையும் விண்ணப்பப் படிவத்தை தபாலிடும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டையும் தயாராக வைத்திருப்பது பயன் மிக்கதாக இருக்கும்.

12.2 பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அவ்விதிமுறைகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்பட வேண்டியிருக்கும்.

12.3 **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரி திருப்திப்படும் வகையில் அனைத்துப் பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். பின்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

- தேசிய ஆளடையாள அட்டை
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
- செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

12.4 மேலும் விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் விதத்தில் முகம் மற்றும் இருகாதுகளும் தெரியும் விதமாக பரீட்சை மண்டபத்தினுள் வருகை தர வேண்டும். அவ்வாறு ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் உட்சென்றதில் இருந்து பரீட்சை முடிவடையும் வரையில் பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் கண்டுகொள்ளக் கூடிய விதத்தில் முகம் மற்றும் இருகாதுகளும் மறைக்கப்படாமல் இருத்தல் வேண்டும்.

13. அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில், அரச கூட்டுத்தாபனங்களில் சேவை புரிகின்ற அலுவலர்கள் தமது திணைக்கள / நிறுவனத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்ற முன்னர் சகல பரீட்சார்த்திகளும் தமது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திக்கொள்ளல் கட்டாயமாகும். நிறுவனங்களிலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை தாம் சேவை புரிகின்ற நிறுவனத் தலைவர்கள் மூலம் அத்தாட்சிப்படுத்திக்கொள்ள வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர் / ஓய்வு பெற்ற அதிபர், தமது பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது பௌத்த விகாரையொன்றுக்குப் பொறுப்பான மதகுரு அல்லது தலைமைப் பிக்கு அல்லது வேறு மதங்களின் மதஸ்தலமொன்றுக்குப் பொறுப்பான, முக்கிய அந்தஸ்துக் கொண்ட மதத்தலைவர் ஒருவர் ஆகிய ஒருவரைக்கொண்டு அத்தாட்சிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

14. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை, 2020.03.13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் எனவும் குறிப்பிடல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரி ஒரு பதவிக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்களை அனுப்ப வேண்டிய முகவரி :
பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்த,
பத்தரமுல்ல.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழிப் பிரயோகங்களுக்கிடையில் ஏதும் பொருத்தமின்மைகள் இருப்பதாகக் கண்டறியப்படின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

16. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருந்தால் அது தொடர்பில் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தீர்மானம் மேற்கொள்வார்.

கலாநிதி.எஸ்.ஏ.கிரிஷ்னராஜா
பணிப்பாளர் நாயகம்
தேசிய தாவரவியல் பூங்காக்கள்
திணைக்களம்.

த.பெ. இலக்கம் 14,
பேராதனை.

**சுற்றாடல் மற்றும் வன சீவராசிகள் வளங்கள் அமைச்சு**
**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்**

இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் தரம் III அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம் – 2020

Open and Limited Competitive Examination for Recruitment to Grade III Technical Service Officers – 2020

பரீட்சை மொழி மூலம்

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் -4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

விண்ணப்பிக்கும் பதவி
பூங்கா அபிவிருத்தி உதவியாளர் -1
ஆராய்ச்சி உதவியாளர் -2
செவிப்புல கட்புல உதவியாளர் -3
தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) -4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

(ஒரு விண்ணப்பதாரி ஒரு பதவிக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்)

எந்தப் பரீட்சைக்குத் தோற்றுகிறீர் ?
திறந்த -1
மட்டுப்படுத்தப்பட்ட - 2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

01. 1.1. முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
(உதா :- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
..........................................................................................................
..........................................................................................................

1.2 இறுதியில் வரும் பெயர் முதலிலும், ஏனைய பெயர்களது ஆரம்ப எழுத்துக்கள் பின்னரும் வரும் வகையில் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
(உதா :- GUNAWARDHANA H.M.S.K.)
..........................................................................................................

1.3.முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) :
..........................................................................................................
..........................................................................................................

1.4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

02. 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்) :
..........................................................................................................
..........................................................................................................

2.2 அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
..........................................................................................................
..........................................................................................................

03. 3.1 ஆண் / பெண் :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி : ஆண்டு மாதம் திகதி

3.3. விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியன்று வயது :
வருடங்கள் மாதங்கள் நாட்கள்

3.4. தொலைபேசி இலக்கம் :

04. 4.1 எத்திகதியிலிருந்து மாவட்டத்தில் வசிக்கிறீர்கள் :..........................................................
4.2 உப அரச அதிபர் / பிரதேச செயலகப் பிரிவு : ..........................................................
4.3 கிராம அலுவலர் பிரிவு : ..........................................................

05. கல்வித் தகைமைகள்:-

5.1 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பற்றிய விபரம் :
(i) பரீட்சை வருடமும் மாதமும் :..........................................................
(ii) பரீட்சைச் சுட்டெண் :..........................................................
(iii) பெறுபேறு

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.2 க.பொ.த. உயர் தரப் பரீட்சை பற்றிய விபரம் :
(i) பரீட்சை வருடமும் மாதமும் :..........................................................
(ii) பரீட்சைச் சுட்டெண் :..........................................................
(iii) பெறுபேறு:

| பாடம் | சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

06. வேறு தகைமைகள் : ..........................................................
..........................................................

07. நீர் எப்பொழுதாவது ஏதும் குற்றச்சாட்டொன்றுக்கு நீதிமன்றமொன்றால் குற்றவாளியாக ஆக்கப்பட்டுள்ளீரா?:
( உரிய கூட்டில் (√ ) அடையாளத்தை இடவும்) ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடுக.

ஆம் இல்லை.

..........................................................................................................
..........................................................................................................

08. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு பற்றிய விபரம்
(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :..........................................................
(ii) பற்றுச் சீட்டு இலக்கமும் திகதியும் : ..........................................................
(iii) செலுத்திய பணத்தொகை : ..........................................................

பற்றுச் சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.
(அதன் நிழற்பிரதியொன்றை தங்களிடம் வைத்துக் கொள்வது பயன் மிக்கதாகும்)

09. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையும் சரியானவையென உறுதி மொழிகின்றேன். இதில் ஏதும் பகுதிகளை பூரணப் படுத்தாமல் மற்றும்/அல்லது பிழையாக பூரணப்படுத்துவதால் ஏற்படக் கூடிய இழப்புகளை ஏற்றுக் கொள்ள இணங்குகின்றேன். மேலும் இதன் சகல பகுதிகளையும் எனது அறிவுக்கு எட்டிய வகையில் சரியாகப் பூரணப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கின்றேன்.

(ஆ) என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை என உறுதியானால், நியமிக்கப்பட முன்னரெனில் தகுதியற்றவனாக ஆவதாகவும் நியமனம் பெற்ற பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்குட் படுவதாகவும் நான் அறிவேன்.

(இ) மேலும், இப்பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுவதாகவும் பிரகடனப்படுத்துகின்றேன்.

(ஈ) இங்கு தரப்பட்டுள்ள எந்தத் தகவலையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

..................................................................

திகதி : .......................................... விண்ணப்பதாரியின் கையொப்பம்

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துதல்.

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு / திருமதி / செல்வி ............................................. அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் .................................... ... ஆந் திகதி தனது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளதாகவும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................................................

திகதி : .......................................... கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

11. அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் : ..........................................................................

(i) பதவி : ..........................................................................

(ii) முகவரி : ..........................................................................

..................................................................

(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்துக)

12. அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்.

திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல் :

இவ்விண்ணப்பதாரியான திரு. / திருமதி / செல்வி ..........................................தற்போது இந்த அமைச்சில் / திணைக்களத்தில் ..........................................ஆக நிரந்தர/ தற்காலிக அலுவலராக பணி புரிகின்றார் எனவும் அவருக்கு இப்பதவியின் பணிகளை மேற்கொள்ளும் தகைமை உள்ளது / இல்லை எனவும் தெரிவிக்கின்றேன். அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் இந்த அமைச்சில் / திணைக்களத்தில் அவர் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கின்றேன்.

..................................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பமும்.

உத்தியோக முத்திரையும்.

திகதி :..........................................................................

பெயர் :..........................................................................

பதவி :..........................................................................

அமைச்சு / திணைக்களம் :..........................................................

2-519

---

திருத்தம்

**உள்நாட்டு வர்த்தக, உணவு பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலன்புரி அமைச்சு**

**அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்**

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் சேவை தரம் III இல் அளவியல் விஞ்ஞான ஆய்வு உத்தியோகத்தர் (திணைக்களம் சார்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2020.01.31 ஆந் திகதிய 2161 ஆம் இலக்க வர்த்தமானியில் இலக்கம் 01-790 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் 9 ஆம் பகுதி பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படல் வேண்டும்.

09. அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை/அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் சேவையிலுள்ள மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களின் உச்ச வயதெல்லை 45 ஆக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவன தலைவரினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

எஸ். என். அகுரன்திலக்க,
அளவீட்டு அலகுகள், நியமங்கள்,
மற்றும் சேவைகள் பணிப்பாளர்.

2020, பெப்புருவரி 06.

02-460

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : கம்பஸ் டிரெக்ட் எடியு ஒப்ஷன்ஸ் ஜெர்மனி (பிறைவட்) லிமிடட்
பதிவிலக்கம்: பீவீ 00218488
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.12.18
பதிவு முகவரி : 110, லெவல் 02, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு -08

பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,

சமலி ரணதுங்க,
கம்பனிச் செயலாளர்.

2- 221

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : மெடி த்ரீ சிக்ஸ்ரி சிலோன் (பிரைவெட்) லிமிடெட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.10.22
பதிவு இலக்கம்: பீவீ 00205598
பதிவு முகவரி :இல. 10/8/ஏ, சிம்போனியா தோட்டம், இஹல கரகஹமுன, கடவத்த

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

2- 247

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : திதுல கென்ஸ்ரக்ஷன் என்ட் டிசைனிங் (பிறைவெற்) லிமிடெட்
பதிவு இலக்கம்: பீவீ 00217557
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2019.11.14
பதிவு முகவரி :இல. 73, புதிய வர்த்தக தொடர்மாடி, அகங்கம, காலி

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

2- 248

---

### சிங்கா சிமெண்ட் ( பிரைவேட்) லிமிடெட் பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் (3) (b) உப பிரிவுக்கிணங்க N F C L பென்னா போர்ட் ஸ்டோரேஜஸ் (பிறைவேட்) லிமிடெட்டை (242(1) க்கு இணங்க கம்பனி பதிவிலக்கம் PV 129810) சிங்கா சிமெண்ட் ( பிறைவேட்) லிமிடெட் ( கம்பனி பதிவிலக்கம் PV 13719) உடன் 242(1) க்கு இணங்க இணைப்பது பற்றிய அறிவித்தல்

2020, சனவரி 21 ஆந் திகதியன்று கூடிய சிங்கா சிமெண்ட் (பிறைவேட்) லிமிட்டெட்டின் முற்றுமுழுதான துணைநிறுவன மான N F C L பென்னா போர்ட் ஸ்ரோரேஜஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினரும் N F C L பென்னா போர்ட் ஸ்ரோரேஜஸ் ( பிறைவேட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினரும் (நிறுவனம்) சந்தித்து N F C L பென்னா போாட் ஸ்டோரேஜஸ் ( பிறைவேட்) லிமிட்டெட்டை, சிங்கா சிமெண்ட் (பிறைவேட்) லிமிட்டெட்டுடன் பிரிவு 242(1) இணைப்பது குறித்து முடிவெடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் சிங்கா சிமெண்ட் (பிறைவேட்) லிமிட்டெட் நிலைத்திருக்க, N F CL பென்னா போர்ட் ஸ்டோரேஜஸ் ( பிறைவேட்) லிமிடெட் அதன் செயற்பாட்டை நிறுத்தும்.

இவ்வறிவித்தல் வெளிவந்த 20 தினங்களுக்குள் 244(1) ஆம் பிரிவுக்கிணங்க N F C L பென்னா போாட் ஸ்டோரேஜஸ் (பிறைவேட்) லிமிடெட் மற்றும் சிங்கா சிமெண்ட் ( பிறைவேட்) லிமிடெட் ஆகியவற்றை ஒன்றாக இணைப்பதற்குத் தேவையான பிரிவு 243 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள், கம்பனிகள் பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் இவ்விரு நிறுவனங்களின் இணைப்பானது செல்லுபடியாகும்.

சட்டத்தின் 242(4) ஆம் பிரிவுக்கிணங்க, இணைப்பு தொடர்பான முன்மொழிவுகளின் பிரதிகள், இணைவு குறித்த சிங்கா சிமெண்ட் (பிறைவேட்) லிமிடெட் மற்றும் N F C L பென்னா போர்ட் ஸ்டோரேஜஸ் (பிறைவேட்) லிமிடெட்டின் பணிப்பாளர் சபையினரின் அங்கீகாரம் என்பன இந்நிறுவனத்தின் பங்குதாரர்கள் மற்றும் இந்நிறுவனம் பொறுப்புக் கூறத் தக்கவர்கள் பார்வையிடும் வகையில், சிங்கா சிமெண்ட் (பிறைவேட்) லிமிடெட்டில் இல. 44/1, நுகே வீதி, பிலியந்தலை எனும் முகவரியில் உள்ள அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சாதாரண வேலை நேரங்களில் பார்வையிடப்பட முடியும்.

இவ்விணைப்பு குறித்த ஆவணங்களின் பிரதியானது இந் நிறுவனத்தின் பங்குதாரர் அல்லது இந் நிறுவனம் பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு, அவர்கள் கோரிக்கை விடுக்குமிடத்து இலவசமாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

சிங்கா சிமெண்ட் ( பிறைவேட்) லிமிடெட்டின் பணிப்பாளர் சபையின் உத்தரவுக்கமைய,

எஸ்ஜே கோர்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிடெட்,
செயலாளர்கள்.

2020, சனவரி 21.
2- 309

---

### N F C L பென்னா போர்ட் ஸ்டோரேஜஸ் (பிறைவேட்) லிமிடெட் பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் (3) (b) உப பிரிவுக்கிணங்க என் எப் சீ எல் பென்னா போர்ட் ஸ்டோரேஜஸ் (பிறைவேட்) லிமிடெட்டை (242(1) க்கு இணங்க கம்பனி பதிவிலக்கம் PV 129810) சிங்கா சிமெண்ட் ( பிறைவேட்) லிமிடெட் ( கம்பனி பதிவிலக்கம் PV 13719) உடன் 242(1) க்கு இணங்க இணைப்பது பற்றிய அறிவித்தல்

2020, சனவரி 21 ஆந் திகதியன்று கூடிய சிங்கா சிமெண்ட் (பிறைவேட்) லிமிட்டெட்டின் முற்றுமுழுதான துணை நிறுவனமான என் எப் சீ எல் பென்னா போர்ட் ஸ்ரோரேஜஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினரும் என் எப் சீ எல் பென்னா போர்ட் ஸ்ரோரேஜஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினரும் (நிறுவனம்) சந்தித்து என் எப் சீ எல் பென்னா போாட் ஸ்டோரேஜஸ் ( பிறைவேட்) லிமிட்டெட்டை, சிங்ஹ சிமெண்ட் ( பிறைவேட்) லிமிட்டெட்டுடன் பிரிவு 242(1) இணைப்பது குறித்து முடிவெடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் சிங்ஹ சிமெண்ட் (பிறைவேட்) லிமிடெட் நிலைத்திருக்க, என் எப் சீ எல் பென்னா போர்ட் ஸ்டோரேஜஸ் ( பிறைவேட்) லிமிடெட் அதன் செயற்பாட்டை நிறுத்தும்.

இவ்வறிவித்தல் வெளிவந்த 20 தினங்களுக்குள் 244(1) ஆம் பிரிவுக்கிணங்க என் எப் சீ எல் பென்னா போாட் ஸ்டோரேஜஸ் (பிறைவேட்) லிமிடெட் மற்றும் சிங்கா சிமெண்ட் ( பிறைவேட்) லிமிடெட் ஆகியவற்றை ஒன்றாக இணைப்பதற்குத் தேவையான பிரிவு 243 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள், கம்பனிகள் பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் இவ்விரு நிறுவனங்களின் இணைப்பானது செல்லுபடியாகும்.

சட்டத்தின் 242(4) ஆம் பிரிவுக்கிணங்க , இணைப்பு தொடர்பான முன்மொழிவுகளின் பிரதிகள், இணைவு குறித்த சிங்ஹ சிமெண்ட் ( பிறைவேட்) லிமிடெட் மற்றும் என் எப் சீ எல் பென்னா போர்ட் ஸ்டோரேஜஸ் ( பிறைவேட்) லிமிடெட்டின் பணிப்பாளர் சபையினரின் அங்கீகாரம் என்பன இந்நிறுவனத்தின் பங்குதாரர்கள் மற்றும் இந்நிறுவனம் பொறுப்புக் கூறத்தக்கவர்கள் பார்வையிடும் வகையில், சிங்கா சிமெண்ட் (பிறைவேட்) லிமிடெட்டில் இல. 44/1, நுகே வீதி, பிலியந்தலை எனும் முகவரியில் உள்ள அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சாதாரண வேலை நேரங்களில் பார்வையிடப்பட முடியும்.

இவ்விணைப்பு குறித்த ஆவணங்களின் பிரதியானது இந் நிறுவனத்தின் பங்குதாரர் அல்லது இந் நிறுவனம் பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு, அவர்கள் கோரிக்கை விடுக்குமிடத்து இலவசமாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

என் எப் சீ எல் பென்னா போர்ட் ஸ்ரோரேஜஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையின் உத்தரவுக்கமைய,

எஸ்ஜே கோர்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிடெட்,
செயலாளர்கள்.

2020, சனவரி 21.
2- 310

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

மத்துரட, அம்பிட்டிக்கொட மகாவெவ குடியிருப்பு இல.122/1 என்ற இடத்தில் குடியிருக்கும் தேசிய அடையாள அட்டை இல. 842572711V கொண்ட புஸ்ஸ லமங்கட முதியன்சேலாகே அசங்க சந்திர பண்டார ஆகிய நான், ராகம, ஹொரப்பே, சிறிவர்தன மாவத்தை, இல. 125/E என்ற இடத்தில் குடியிருக்கும் தேசிய அடையாள அட்டை இல. 947931199V கொண்ட சுமேதிக்கா பிரியதர்சனி வாசுதேவ என்பவருக்கு வழங்கப்பட்டதும், சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான எம்.ஐ.எம்.ஐநுல்லா அவர்களால் 2017.02.15 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்டதுமான இல. 2399 என்ற அற்றோணித்தத்துவப்பத்திரத்தை 2020.01.27 ஆந் திகதி தொடக்கம் எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் உடனடியாக இரத்துச் செய்கின்றேன். இதற்கு பின்னர் மேற்படி அற்றோணித் தத்துவப்பத்திரம் மூலம் புரியப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்புக் கூற மாட்டேன் என அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

பீ. எம். அசங்க சந்திர பண்டார.

2- 189

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஜேர்மன், பேர்லின், Luefyowufer-2, 10785 ஐச் சேர்ந்த சஞ்சீவி ரமணி சஹபந்து ஆகிய நான், இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக்கொள்வதாவது, இலங்கையில் எனது அற்றோணிதத்துவதாரராக கோட்டே, எத்துல் கோட்டை, ஜயவர்தன புர , இல. 761 ஐச் சேர்ந்த சந்திரா மனிலால் சஹபந்துவை ( தே.அ.அ.இல. 470103558V) நியமித்த ஜேர்மன் பிரசித்த நொத்தாரிசு Walter Schmidt மூலம் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2005.03.17 ஆந் திகதியிடப்பட்ட விசேட அற்றோணித்தத்துவம் என்னால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதாகும். இது முதற்கொண்டு எனது அற்றோணிதத்து வதாரரால் மேற்படி அற்றோணித்தத்துவத்தை உபயோ கித்து மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையும் செல்லு படியற்றது என்பதுடன் மேற்படி அற்றோணி தத்துவம் இரத்துச் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும்.

சஞ்சீவி ரமணி சஹபந்து.

2-226

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் இல. 5 ஆவது ஒழுங்கை, ஹெலேனா வத்த, குடிரிப்புவ, கல்முருவையைச் சேர்ந்த முன்கொட ஹேவகே சந்துன் சங்கல்ப ஆகிய நான், அந்த விலாசத்தைச் சேர்ந்த மகீனா மிறெண்டு இரோஷா சஞ்ஜீவனீ என்பவருக்கு இஸ்ரேயலில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு இரண்டாம் உப செயலாளர் மற்றும் செயலாளர் எச். எச். ஆர். விக்ரமசிங்க முன்னிலையில் 2018.02.25 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டு அதிகார பூர்வமாக எழுதப்பட்ட 121 தொகுதியில் 9914 என்ற folio புத்தக பதிவான புத்தக இல. 1423 உடைய 2018.04.09 என்ற திகதியில் வடமத்திய மாகாணத்தின் பதிவாளர் ஆணையாளர் திணைக்களத்தின் குருநாகல் பிரிவின் மூலம் இத் தத்துவத்தை இத்தினத்திலிருந்து இல்லாதொழித்தும் இரத்துச் செய்தும் வரிதாக்கியும் விடுகின்றேன் என இத்தால் பொது மக்களுக்கும் மேற்படி குடியரசின் அரசாங்கத்திற்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

முன்கொட ஹெவகே சந்துன் சங்கல்ப.

2-229

**குறிப்பு.**- மேலே பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தல்களின் தொடர்ச்சியை தயவுசெய்து 2020.02.14 ஆந் திகதி பிரசுரமாகும் அரசாங்க வர்த்தமானி **பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள் பகுதியில்** இல் பார்க்கவும்.

# பகுதி I : தொகுதி (I) - பொது

**குறிப்பு.**- மேற்படி தலைப்பின் கீழ் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களை தயவுசெய்து 2020.02.014 ஆந் திகதி பிரசுரமாகும் அரசாங்க வர்த்தமானியில் பார்க்கவும்.

வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியினால் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.
www.documents.gov.lk